


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது **தினகனி**

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 116 | 4 Pages | 25.11.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 116 | 4 பக்கங்கள் | 25.11.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**மனந்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க்**
**கில்லைநன் றாகா வினை**

**விளக்கம்: மனம் தூய்மையாகப் பெற்றவர்க்கு , அவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ் முதலியவை நன்மையாகும், இனம் தூய்மையாக உள்ளவர்க்கு நன்மையாகாத செயல் இல்லை.**

## நைஜீரியாவில் கடத்தப்பட்ட பள்ளிக் குழந்தைகளை விடுவிக்க போப் லியோ வேண்டுகோள்



அபுஜா, நவ.25

ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவின் நைஜர் மாகாணத்தில் கத்தோலிக்க கிறிஸ்தவ பள்ளி ஒன்று செயல்படுகிறது. இங்கு 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்த பள்ளிக்குள் துப்பாக்கியுடன் ஆயுத கும்பல் நுழைந்தது. பின்னர் துப்பாக்கிமுனையில் 100க்கும் மேற்பட்டோரைகடத்தி சென்றதாகதகவல் வெளியானது. தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் 303 குழந்தைகள் மற்றும் 12 ஆசிரியர்கள் கடத்தப்பட்டது தெரிய வந்துள்ளது.

முன்னதாக கடந்த 18ந்தேதி எர்கு நகரில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த 40 பேரை ஆயுதக்குழுவினர் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றனர். அதில் 2 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில், 38 பேர் விடுவிக்கப்பட்டனர். நேற்றைய தினம் நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் ஆயுதக்குழுவினருடன் நடந்த மோதலில் 5 பாதுகாப்பு படை வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், பள்ளிக்குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் கடத்தப்பட்ட சம்பவத்திற்குஇதுவரைஎந்தஆயுதக்குழுவினரும்பொறுப்பேற்கவில்லை. அதே சமயம், கடத்தப்பட்டவர்களை மீட்க தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக பாதுகாப்பு படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், கடத்தப்பட்டவர்களில் சுமார் 50 குழந்தைகள் ஆயுதக்குழுவினரின் பிடியில் இருந்து தப்பி வந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், நைஜீரியாவில் கடத்தப்பட்ட பள்ளிக் குழந்தைகளை விடுவிக்க போப் லியோ வேண்டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து அவர் கூறியிருப்பதாவது;

"கடத்தப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள துயரம் குறித்து நான் மிகுந்த வேதனையடைகிறேன். பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று நான் மனதார வேண்டுகோள் விடுக்கிறேன். மேலும் அவர்களை உடனடியாக மீட்பதற்கு அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## டிரம்ப் முன்மொழிந்த ரஷியாஉக்ரைன் அமைதி திட்டத்தில் திருத்தம் ஐரோப்பிய நாடுகள் வலியுறுத்தல்

ஜெனீவா, நவ.25

ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது ரஷியா போர் தொடுத்து 4 ஆண்டுகள் நிறைவடைய உள்ளன. இந்த போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார். ரஷியாவிடம் கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு அதிக வரி விதித்தார். ரஷிய அதிபர் புதினை அழைத்து பேசினார். ஆனால் போர் நிறுத்த முயற்சியில் எந்த முன்னேற்றமும் இல்லை. இதையடுத்து, போரை நிறுத்தும் அடுத்தகட்ட முயற்சியாக டிரம்ப் 28 அம்ச அமைதி திட்டத்தை முன்மொழிந்தார்.


ஆனால், ரஷியா நீண்ட நாட்களாக வலியுறுத்தி வரும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதுபோல் இந்த அமைதி திட்டம் இருப்பதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அதிருப்தி தெரிவித்துள்ளார். அதே சமயத்தில், ரஷிய அதிபர் புதின் இதை ஏற்றுக்கொண்டுள்ளார். இதற்கிடையே, அமெரிக்காவின் அமைதி திட்டம் குறித்து உக்ரைனுக்கும், சில ஐரோப்பிய நட்பு நாடுகளுக்கும் இடையே நேற்று சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் பேச்சுவார்த்தை நடந்தது.

அதில், உக்ரைன் பிரதிநிதிகள் குழுவுக்கு அந்நாட்டு அதிபர் அலுவலக உயர் அதிகாரி ஆன்ட்றி யெர்மாக் தலைமை தாங்கினார். ஐரோப்பிய நாடுகள் தரப்பில் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் பங்கேற்றனர். அமைதி திட்டம் ரஷியாவுக்கு சாதகமாக இருப்பதால், அதில் திருத்தம் செய்ய வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவான நிலைப்பாடு எடுத்தன.

அடுத்த கூட்டத்தில், அமெரிக்க வெளியுறவு மந்திரி மார்கோ ருபியோவுடன் இக்குழு பேச்சுவார்த்தை நடத்துகிறது. அதில், அமெரிக்க ராணுவ செயலாளர் டேன் டிரிஸ்கோல், டிரம்பின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்கோப் ஆகியோரும் பங்கேற்கிறார்கள். இதுகுறித்து உக்ரைன் அதிபர் அலுவலக உயர் அதிகாரி ஆன்ட்ரி யெர்மாக் தனது சமூக வலைத்தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:

"இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களுடன் முதல்கட்ட பேச்சுவார்த்தை நடத்தினோம். அந்நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவாக இருப்பதுடன், அமைதி திட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளன. அடுத்தபடியாக அமெரிக்க குழுவுடன் பேசுவோம். உக்ரைனுக்கு நீடித்த அமைதியை அளிக்க இணைந்து செயல்படுவோம்." இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## டைட்டானிக் கப்பலில் இருந்து எடுக்கப்பட்ட தங்க கெடிகாரம்: எவ்வளவு ஏலம் போனது தெரியுமா?



லண்டன், நவ.25

இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டன் நகரில் இருந்து அமெரிக்காவுக்கு 1912ம் ஆண்டு டைட்டானிக் என்ற கப்பல் புறப்பட்டது. அட்லாண்டிக் பெருங்கடலில் சென்றபோது அந்த கப்பல் பனிப்பாறையில் மோதியது. உலகையே உலுக்கிய இந்த விபத்தில் 1,500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த விபத்து 1997ம் ஆண்டு டைட்டானிக் என்ற பெயரில் திரைப்படமாக வந்து பலரது கவனத்தையும் ஈர்த்தது.

இதற்கிடையே அந்த கப்பலில் பயணித்தவர்களின்உடைமைகள்மீட்கப்பட்டு அவ்வப்போது ஏலத்துக்கு விடப்படுகின்றன. அந்தவகையில் அமெரிக்க தொழிலதிபரான இசிடோர் ஸ்ட்ராஸ் என்ற பயணியின் தங்க கெடிகாரம் ஒன்று இங்கிலாந்தின் வில்ட்ஷயர் நகரில் ஏலத்துக்கு விடப்பட்டது.

இந்தகெடிகாரம்சுமார்ரூ.20கோடிக்குவிற்கப்பட்டுசாதனைபடைத்துள்ளது. இது டைட்டானிக் கப்பல் தொடர்பான நினைவுப்பொருட்களின் அதிகபட்ச ஏலத்தொகை ஆகும். இதன்மூலம் டைட்டானிக் தொடர்பான மொத்த ஏலத்தொகை ரூ.35 கோடியை தாண்டியதாக ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

# பார்வையற்றோர் பெண்கள் உலகக்கோப்பையில் இந்தியா சாம்பியன்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை நவ.25

பார்வையற்றவர்களுக்கான முதலாவது பெண்கள் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி டெல்லி மற்றும் கொழும்புவில் நடைபெற்றது. இந்த தொடரை இந்தியா மற்றும் இலங்கை இணைந்து நடத்தின. இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய ஆறு அணிகள்கலந்துகொண்ட இந்ததொடர், கடந்த நவம்பர் 11ம் தேதி டெல்லியில் தொடங்கியது.

இந்த தொடரின் இறுதிப் போட்டி கொழும்புவில் இன்று நடைபெற்றது. இதில் இந்தியா நேபாளம் அணிகள் மோதின. முதலில் பேட்டிங் செய்த நேபாள அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 114 ரன்கள் மட்டுமே அடித்தது.

பின்னர் 115 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி வெறும் 12.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 117 ரன்கள் அடித்து அபார வெற்றி பெற்றது.



அத்துடன் பார்வையற்றவர்களுக்கான முதலாவது பெண்கள் டி20 உலகக்கோப்பையை இந்திய அணி கைப்பற்றியுள்ளது.

இந்த நிலையில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய அணிக்கு தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "துணிவு வழிநடத்தும்போது வரலாறு உருவாகிறது! முதல் டி20 உலகக் கோப்பையை வென்ற சிறப்பான நமது பெண்கள் பார்வையற்றோர்கிரிக்கெட்அணிக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகள். நீங்கள் இந்தியாவின் பெருமையாகவும், உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் உயர்ந்து நிற்கிறீர்கள்!" என்று தெரிவித்துள்ளார்.

## தாராபுரம் அலங்கியம் - இலவச பட்டா கோரி பொதுமக்கள் ரேஷன்-ஆதார்-வாக்காளர் அட்டைகள் ஒப்படைப்பு; வட்டாட்சியர் வாகனம் முற்றுகை - பரபரப்பு

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே உள்ள அலங்கியம் பகுதியைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட குடும்பங்கள், கடந்த மூன்று ஆண்டுகளாக இலவச பட்டா கோரி பல முறை மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வருவாய் துறை அதிகாரிகளிடம் மனுக்கள் அளித்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாததால் இன்று பெரும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்

பட்டாவழங்கப்படாததற்குஎதிர்ப்பு தெரிவித்து, இன்று தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்க வந்த



பொதுமக்கள், தங்கள் ரேஷன் கார்டு, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை நேரடியாக வட்டாட்சியரிடம் ஒப்படைத்தனர். மேலும், பட்டா வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் தேர்தலை புறக்கணித்து யாருக்கும் வாக்களிக்க மாட்டோம் என பொதுமக்கள் எச்சரித்தனர். போராட்டம் தீவிரமடைந்த நிலையில், வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்ட பொதுமக்கள், வட்டாட்சியர் வெளியே செல்ல முடியாத அளவுக்கு அலுவலக வாகனத்தை சிறைபிடித்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்

## திருமணமான 18வது நாளிலேயே புதுப்பெண் திடீர் மாயம்; குறுந்தகவலை பார்த்து கணவர் அதிர்ச்சி

நாகர்கோவில், நவ.25

குமரி மாவட்டம் குளச்சல் அருகே உள்ள செம்பொன்விளை கேசவன்சேரி விளையை சேர்ந்தவருக்கு 31 வயது ஆகிறது. வெளிநாட்டில் வேலை பார்த்த இவர் தற்போது மணவாளக்குறிச்சியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். இவருக்கும், தூத்துக்குடி மாவட்டம் நாசரேத்தை சேர்ந்த 24 வயது பெண்ணுக்கும் கடந்த 3ந்தேதி திருமணம் நடந்தது.பிறகு மணமக்கள் இருவரும் உறவினர் வீடுகளுக்கு விருந்துக்கு சென்றபடி இருந்தனர். இந்த நிலையில் திருமணமாகி 18வது நாளன்று (21ந் தேதி) மாலையில் புதுப்பெண் திடீரென மாயமாகி விட்டார். அந்த சமயத்தில் வெளியே சென்று வீடு திரும்பிய வாலிபரின்தாயார், மருமகளை காணாமல் பயந்து போனார்.

மேலும் தனது மகனுக்கு நடந்த விவரத்தை கூறி வீட்டுக்கு வரவழைத்தார். இதனை தொடர்ந்து இருவரும் பல இடங்களில் தேடினர். ஆனால் அவரை பற்றி எந்தவொரு தகவலும் இல்லை. புதுப்பெண்ணின் செல்போனும் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. அதே சமயத்தில் வீட்டில் தேடிய போது தாலி செயின் மட்டும் இருந்தது. இதனால் தாலியை புதுப்பெண் கழற்றி வைத்து விட்டு சென்றிருக்கலாம் என நினைத்தனர். இந்த பரபரப்பான சூழ்நிலையில் வாலிபரின் செல்போனுக்கு வாட்ஸ்அப் மூலமாக அவரது மனைவி குறுந்தகவல் (வாய்ஸ் மெசேஜ்) ஒன்று அனுப்பினார்.

அதில், விருப்பம் இல்லாமல் கட்டாயப்படுத்தி எனக்கு திருமணம் செய்து வைத்து விட்டனர். உங்களை ஏமாற்றியதற்கு என்னை மன்னித்து விடுங்கள்.என்னைதேடாதீங்க,நான்வரமாட்டேன். தாலியைகூட வேண்டாம் என்று கழற்றி வைத்துவிட்டு வந்து விட்டேன். என்னால் உங்க கூட சந்தோஷமாக வாழ முடியல 'ப்ளீஸ்' என்று அனுப்பி உள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த இளம்பெண்ணின் கணவர்

## அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ கொலை வழக்கு: பவாரியா கொள்ளையர்கள் 3 பேருக்கு ஆயுள் தண்டனை



சென்னை, நவ.25

கடந்த 200106 அதிமுக ஆட்சி காலகட்டத்தில் அதிமுக எம்.எல்.ஏவாகவும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராகவும் இருந்து வந்த சுதர்சனம், பெரியபாளையம் அருகே உள்ள தானாக்குளத்தில் தனது குடும்பத்தினருடன் வசித்து வந்தார்.கடந்த 2005 ஜன.9 அன்று நள்ளிரவில் இவரது வீட்டுக்குள் புகுந்த பவாரியா கொள்ளையர்கள் சுதர்சனத்தை சுட்டு க்கொலைசெய்துவிட்டு, வீட்டில் இருந்தவர்களை தாக்கி 62 சவரன் நகை, பணத்தை கொள்ளையடித்து சென்றது. அதையடுத்து இந்த கும்பலை சுட்டுப்பிடிக்க அப்போதைய முதல்அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதையடுத்து ஐஜி ஜாங்கிட் தலைமையில் சிறப்பு தனிப்படை உருவாக்கப்பட்டு, பவாரியா கொள்ளையர்களான அரியானாவைச் சேர்ந்த ஓம் பிரகாஷ், அவரது சகோதரர் ஜெகதீஷ், ராகேஷ் மற்றும் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த அசோக், ஜெயில்தார் சிங் மற்றும் 3 பெண்கள் உள்பட 9 பேரை போலீசார் கைது செய்தனர்.

புழல் சிறையில் இருந்த ஓம் பிரகாஷ் உள்ளிட்ட இருவர், வழக்கு விசாரணையின்போது இறந்து விட்டனர். ஜாமீனில் விடுவிக்கப்பட்ட 3 பெண்கள் தலை மறைவாகினர். எஞ்சிய ஜெகதீஷ் உள்ளிட்ட 4 பேர் மீதான வழக்கு விசாரணை சென்னை 15வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 20 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு விசாரணை நீதிபதி ஆபிரகாம் லிங்கன் முன்பாக நடந்தது. அப்போது அரசுதரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர்கள் ஜி.சீனிவாசன், மகாராஜன் ஆஜராகி வாதிட்டனர். 84 பேர் சாட்சியம் அளித்தனர். 100க்கும் மேற்பட்ட சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அதேபோல குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆர்.சங்கரசுப்பு ஆஜரானார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ஆபிரகாம் லிங்கன், இந்த வழக்கில் கைதாகி கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக நீதிமன்ற காவலில் சிறையில் இருந்து வரும் ஜெகதீஷ், ராகேஷ், அசோக் ஆகிய 3 பேரும் குற்றவாளிகள் என தீர்ப்பளித்தார். இவர்களுக்கான தீர்ப்பு விவரம் நவ.24 அன்று அறிவிக்கப்படும் என 22ம் தேதி நீதிபதி அறிவித்தார்.

இந்தநிலையில், ஜெகதீஷ், ராகேஷ், அசோக், ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதித்து சென்னை கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. கொலை வழக்கில் 4வதுதாக குற்றம் சாட்டப்பட்ட ஜெயில்தார் சிங் என்பவர் விடுதலை செய்யப்பட்டார். அதிமுக எம்.எல்.ஏ சுதர்சனம், பவாரியா கொள்ளையர்களால் சுட்டுக்கொல்லப் பட்ட வழக்கில் 20 ஆண்டுகளுக்கு பிறகு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.



# குடும்பத்தகராறில் விபரீதம்.. 2 மகள்களை கொன்று எலக்ட்ரீசியன் தற்கொலை



மதுரை, நவ.25

மதுரை ஆலங்குளம், முடக்கத்தான் பகுதியை சேர்ந்தவர் கோபிராஜ் (வயது 40), எலக்ட்ரீசியன். இவருடையமனைவி காயத்ரி. இவர்களது மகள்கள் யுவஸ்ரீ (10), கனிஷ்கா (5). சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் அந்த பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்தனர். குடும்ப வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாக சென்ற நிலையில் திடீரென்று கணவன், மனைவிக்கு இடையே சிறியசண்டை ஏற்பட்டது.

இதனால் மனவருத்தம் அடைந்த காயத்ரி கோபித்துகொண்டு கடந்த 2 நாட்களுக்கு முன்பு அவரது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டார். மனைவி சென்ற சோகத்தில் கோபிராஜ், தனது மகள்களுடன் இருந்து வந்தார்.

இந்தநிலையில் நேற்று இரவு நீண்ட நேரம் கோபிராஜ் வீட்டின் கதவு திறக்காமல் இருப்பதை கண்டு அருகில் வசிப்பவர்கள் சந்தேகம் அடைந்தனர். உடனே அவர்கள் இதுகுறித்து கூடல்புதூர் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். அதன் பேரில் போலீசார் அங்கு விரைந்து வந்தனர். அங்கு யுவஸ்ரீ, கனிஷ்கா ஆகியோர் பிணமாகவும், கோபிராஜ் தூக்கில் தொங்கியபடி பிணமாக இருப்பதையும் கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

பின்னர் அவர்களது உடல்களை கைப்பற்றி போலீசார் விசாரித்தனர். விசாரணையில், மகள்கள் 2 பேரையும் கோபிராஜ் ஒயரால் கழுத்தை நெரித்து கொலை செய்துவிட்டு, பின்னர் அவர் தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பயின்ற அரசு பள்ளிக்கு புதிய வகுப்பறை கட்டிடம் கட்டிக்கொடுத்த இஸ்ரோ பெண் விஞ்ஞானி



தென்காசி, நவ.25

கடந்த 2023ம் ஆண்டு சூரியனைப் பற்றி ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ சார்பில் விண்ணில் ஏவப்பட்ட ஆதித்யா எல்1 விண்கலம் புவி வட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. இதன் திட்ட இயக்குனராக பணியாற்றியவர் தமிழகத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி நிகர் ஷாஜி.

இவர் தனது சொந்த ஊரான தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் தான் பயின்ற எஸ்.ஆர்.எம். அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதிய வகுப்பறை கட்டிடம் கட்டி கொடுக்க ஏற்பாடு செய்தார். அதன்படி 'நமக்கு நாமே' திட்டத்தில் பெண் விஞ்ஞானி நிகர் ஷாஜி வழங்கிய ரூ.8 லட்சத்துடன் சேர்த்து தமிழக அரசு சார்பில் ரூ.24 லட்சத்தில் புதிய வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டு திறப்பு விழா நேற்று நடந்தது.

விழாவில் பெண் விஞ்ஞானி நிகர் ஷாஜி, மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு புதிய வகுப்பறை கட்டித்தை திறந்து வைத்தனர்.

பின்னர் நிகர் ஷாஜி கூறியதாவது:

நான் பயின்ற பள்ளியில் புதிய வகுப்பறை கட்டிடம் கட்டிக்கொடுத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இஸ்ரோவில் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அடுத்த 25 முதல் 30 ஆண்டுகளுக்கு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் தொடங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தில் பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மதிப்புமிக்க விண்வெளி வீரர்களை பத்திரமாக விண்ணுக்கு கொண்டு சென்று, மீண்டும் அழைத்து வர பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு திட்டத்தையும் வெற்றிகரமாக முடிக்க தீவிரமாக உழைத்து வருகிறோம். இஸ்ரோ மிகவும் மேம்பட்ட நிலையில் உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஓசூர் மகா ராஜகணபதி கோவில் கும்பாபிஷேக விழா



கிருஷ்ணகிரி, நவ.25

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அம்மன் நகரில் புதிதாக ஸ்ரீ மகா ராஜகணபதி கோவில் கட்டப்பட்டுள்ளது. கட்டுமான பணிகள் நிறைவடைந்த நிலையில், இன்று கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

விழாவை முன்னிட்டு தீர்த்தகுடம், முளைப்பாரி, பம்பை வாத்தியங்கள் ஊர்வலம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கங்கா பூஜை, கணபதி பூஜை, நவக்கிரக ஹோமம், சுதர்சன ஹோமம் மற்றும் யாகசாலை பூஜைகள் நடந்தன. பின்னர் யாகசாலையில் இருந்து புனித கலசங்களில் தீர்த்தங்கள் மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோபுர கலசத்தின் மீது புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தது.

பின்னர் விநாயகர், முருகன், அம்மன் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு புனித நீர் மூலம் மகா அபிஷேகம் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து ஸ்ரீ மகா ராஜகணபதிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடந்தது. விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். விழாவையொட்டி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# கடலூர்: கனமழையால் மின்கம்பி அறுந்து விழுந்து விபத்து 3 பேர் உயிரிழந்த சோகம்



கடலூர் நவ.25

கடலூர் மாவட்டத்தில் கனமழையால், மின்கம்பி அறுந்து விழுந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடலூர் மாவட்டம் ஒரத்தூர் காவல்நிலைய சரகத்துக்கு உள்பட்ட சாத்தமங்கலம் அருகே இன்று காலை முதலே கனமழை பெய்து வருகிறது. இந்த நிலையில், அங்கு சாலையோரம் இருந்த புளியமரம் ஒன்று கனமழையால் சாய்ந்து அந்த வழியாக சென்ற மின்கம்பி மீது விழுந்தது.

இதில் மின்கம்பி அறுந்து கீழே விழுந்தது. அப்போது அங்கு நின்றுகொண்டிருந்த மரிய சூசை, அவரது மனைவி பிலோல் மேரி மற்றும் வனதாஸ் மேரி ஆகியோர் மீது மின்சாரம் தாக்கியதில் அவர்கள் மூவரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்தசம்பவம் குறித்து தகவல் அறிந்து வந்த, மீட்புப் படையினர் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# கொரோனா காலத்தில் உயிரிழந்த ஊழியர்களின் வாரிசுகளுக்கு அரசு வேலை வழங்குக ஓ.பன்னீர்செல்வம்

சென்னை நவ.25

தமிழ்நாடு முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில், "கொரோனா நோய்த் தொற்று தீவிரமாக இருந்த நேரத்தில் பணியில் இருந்தபோது கொரோனா தொற்று தாக்கி உயிரிழந்த மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், நகராட்சி மற்றும் அரசு அலுவலர்கள், காவலர்கள் போன்ற முன்களப் பணியாளர்களின் குடும்பத்தாருக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்று 54 மாதங்கள் கடந்து, ஆட்சியின் ஆயுட்காலமே முடிவுக்கு வரவுள்ள நிலையிலும், உரிய இழப்பீடு வழங்கப்படாத அவல நிலை நீடிக்கிறது. ஒரு வேளை வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருப்பதுதான் திராவிட மாடல் அரசு போலும்.

வாக்குறுதியைதான் நிறைவேற்றவில்லை என்றால், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள விதியையாவது பின்பற்றுகிறதா என்றால் அதுவும் இல்லை. அதாவது, தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி பணியில் இறந்துபோன அரசு ஊழியரின் குடும்பத்தில் ஒருவருக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்குவது அரசாங்கத்தின் கடமை. அப்படி இருக்கையில், கொரோனா தொற்று உச்சத்தில் இருந்த காலத்தில், தங்கள் உயிரை துச்சமென மதித்து, பொதுமக்களுக்காக சேவை புரிந்து, அதன் காரணமாக தொற்று ஏற்பட்டு உயிரிழந்த மருத்துவர்கள் மற்றும் இதர அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை இன்னமும் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், கொரோனா தொற்றின் போது பெரும்பாலான தனியார் மருத்துவமனைகள் மூடப்பட்ட நிலையில், அரசு மருத்துவர்கள் தங்கள் உயிரை துச்சமென மதித்து மக்களுக்காக பணியாற்றினர். இவ்வாறு பணியாற்றிய மருத்துவர்களில், அரசு மருத்துவர் விவேகானந்தன் என்பவர் உயிரிழந்தார். இதனையடுத்து மறைந்த மருத்துவர் விவேகானந்தன் அவர்களின் மனைவி கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்குமாறு கோரியிருந்தார். அரசாங்கத்திடம் பலமுறை முறையிட்டும் பலன் இல்லாத நிலையில் சென்னை ஐகோர்ட்டில் அரசு வேலை தர உத்தரவிடுமாறு மனுத் தாக்கல் செய்தார். இவரது மனுவை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு அவருக்கு கருணை அடிப்படையில் வேலை அளிக்க உத்தரவிட்டது. இருப்பினும், இதுநாள் வரை மறைந்த மருத்துவர் விவேகானந்தனின் மனைவிக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்கப்படவில்லை. சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டும் கொரோனா காலகட்டத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தில் ஒருவருக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்காத தி.மு.க. அரசின் நடவடிக்கை கடும் கண்டனத்திற்குரியது. தி.மு.க.வின் மனிதாபிமானமற்ற செயலுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

முதல்அமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, கொரோனாநோய்த்தொற்று தீவிரமாக இருந்த நேரத்தில் பணியில் இருந்தபோது உயிரிழந்த மருத்துவர் விவேகானந்தனின் மனைவி உள்பட பணியில் இருந்தபோது இறந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திமுக ஆட்சி சமூகநீதியின் இருண்ட காலம்: அன்புமணி ராமதாஸ்

சென்னை , நவ.25

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் , தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் காலாவதியாகி இன்றுடன் ஒரு வாரம் ஆகும் நிலையில், இன்று வரைபுதிய ஆணையத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க இல்லை. உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி வன்னியர் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து பரிந்துரைத்தல், சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துதல் உள்ளிட்ட ஏராளமான பணிகள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு காத்துக் கிடக்கும் நிலையில், அந்த ஆணையத்தை அமைக்க திமுக அரசு நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் வீ.பாரதிதாசன் தலைமையில் கடந்த 2022&ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் திருத்தி அமைக்கப்பட்டது. ஆணையத்தின் 3 ஆண்டு பதவிக்காலம் கடந்த 16&ஆம் தேதியுடன் நிறைவடைந்து விட்டது. அதன்பின் நவம்பர் 17 ஆம் தேதியிலிருந்து புதிய ஆணையம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைக்காமல் திமுக அரசு தாமதம் செய்வதை அனுமதிக்க முடியாது.

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் ஆகியோரின் நலன்களைக் காப்பதில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. தமிழ்நாட்டில் 1990 ஆம் ஆண்டுகளுக்கு முன்பாக சட்டநாதன் தலைமையிலும், அம்பாசங்கர் தலைமையிலும் இரு ஆணையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதன்பின் 1990 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு இதுவரை 15 ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரு வகையான ஆணையங்களும் ஒரே மாதிரியான நோக்கம் கொண்டவை என்றாலும் கூட, அவை இரண்டும் அமைக்கப்பட்ட முறைகள் முற்றிலும் வேறுபட்டவையாகும்.

முதலில் அமைக்கப்பட்ட இரு ஆணையங்களும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சமூகநீதி வழங்க வேண்டும் என்ற தேவைக்காக அமைக்கப்பட்டவையாகும். அவற்றின் பணி முடிந்தவுடன் அந்த ஆணையங்கள் காலாவதியாகிவிடும். அவற்றுக்கு உறுதி செய்யப்பட்ட பதவிக்காலம் கிடையாது. ஆனால், 1990களுக்குப் பிறகு அமைக்கப்பட்ட ஆணையங்களுக்கு உறுதி செய்யப்பட்ட பதவிக்காலங்கள் உண்டு. அந்த ஆணையங்கள் 1992&ஆம் ஆண்டு இந்திரா சகானி வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் அமைக்கப் பட்டவை ஆகும். இந்த ஆணையங்கள் நிரந்தர ஆணையங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அதனால், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் ஒரு வாரத்திற்கும் மேலாக காலியாக இருப்பதை ஏற்க முடியாது.

தமிழ்நாட்டில் சமூகநீதியைக் காக்கும் பெரும் பொறுப்பு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு உண்டு. கடந்த 2022 ஆம் ஆண்டு நீதியரசர் பாரதிதாசன் தலைமையில் அமைக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் புதிய சாதிகளை சேர்த்தல் அல்லது நீக்குதல், இந்த பட்டியல்களை மாற்றியமைத்தல், சமூக, கல்வி பின்தங்கிய நிலையின் அடிப்படையில் இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் இட ஒதுக்கீட்டை மேம்படுத்துதல், இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுகள் மற்றும் உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினரின் உள் ஒதுக்கீடு குறித்து பரிந்துரைத்தல், அதற்கு தேவையான பொருத்தமான, நிகழ்கால தரவுகளைத் திரட்டுவதற்காக சுதந்திரமான கணக்கெடுப்புகளை மேற்கொள்ளுதல், தமிழக அரசால் அவ்வப்போது வழங்கப்படும் சமூகநீதி சார்ந்த பணிகளை செய்தல் ஆகியவை தான் தமிழக அரசு வழங்கிய பணிகள் ஆகும். அவற்றில் ஒன்றைக்கூட, கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் நிறைவேற்றவில்லை.

அந்த வகையில் பார்த்தால், திமுக ஆட்சியும், அண்மையில் காலாவதியான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் மூன்றாண்டு பதவிக்காலமும் சமூகநீதியின் இருண்டகாலமாகவே பார்க்கப்படுகின்றன. அதுமட்டுமின்றி, உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வன்னியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து 3 மாதங்களுக்குள் பரிந்துரைக்குபடி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு 2023&ஆம் ஆண்டு ஜனவரி 12&ஆம் தேதி அரசு ஆணையிட்டது. அதன் பின் ஆணையத்தின் பதவிக்காலம் கடந்த 16&ஆம் தேதி நிறைவடையும் வரை 1040 நாள்களாகி விட்ட போதிலும் ஆணையம் ஆக்கப்பூர்வமாக எதையும் செய்யவில்லை. அந்த வகையில் பதவிக்காலம் முடிவடைந்த ஆணையம் பயனற்ற ஆணையம் தான்.

ஆனாலும், சமூகநீதிக்கான அமைப்புகள் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் சமூகநீதி உயிர் வாழும். கடந்த ஆணையத்தின் சமூகநீதி செயல்பாடுகள் முடங்கிக் கிடந்ததற்கு காரணம் அதன் தலைவரும், உறுப்பினர்களும் மட்டும் அல்ல... தமிழக அரசும் தான். வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கிவிடக்கூடாது என்பதில் திமுக அரசு உறுதியாக இருந்தது. அதனால் தான் வன்னியர் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக பல முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. ஆனால், அதையும் தாண்டி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அதன் சமூகநீதிக் கடமையை நிறைவேற்றியிருக்க வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் எதிர்பார்ப்பு ஆகும். எனினும், ஏமாற்றம் தான் பரிசாகக் கிடைத்தது.

சமூகநீதியை வென்றெடுப்பது தொடர்ச்சியான போராட்டம் ஆகும். எத்தனை ஏமாற்றங்கள் கிடைத்தாலும், நிச்சயமாக சமூகநீதிக்கு வெற்றி கிடைக்கும் என்பது எங்களின் அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும். ஆனால், அதையும் சிதைக்கும் வகையில் புதிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைக்காமல் இருப்பதன் மூலமாக வன்னியர்களுக்கு எதிரான சமூகநீதியை படுகொலை செய்ய எந்த எல்லைக்கும் செல்வோம் என்பதை திமுக அரசு நிரூபித்துள்ளது. திமுகவின் இந்த துரோகத்தை மன்னிக்க முடியாது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்குவது உள்ளிட்ட ஏராளமான சமூகநீதிக் கடமைகளை நிறைவேற்ற தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் கட்டாயத் தேவை ஆகும். இதை உணர்ந்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை திமுக அரசு உடனடியாக அமைக்க வேண்டும். என தெரிவித்துள்ளார் .

# மெட்ரோ ரெயில் திட்டத்தை வைத்து மு.க.ஸ்டாலின் அரசியல் செய்கிறார்: அண்ணாமலை

திருச்சி, நவ.25

திருச்சியில் பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கோவைமதுரை மெட்ரோ ரெயில் திட்டத்தை வைத்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசியல் செய்கிறார். தமிழகத்திற்கு இரண்டு முறை வந்த பிரதமர் மோடியை, முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழகத்திலேயே சந்தித்திருக்கலாம். ஏன் சந்திக்கவில்லை ?.

கோவையிலும், மதுரையிலும் மெட்ரோ வர வேண்டாம் என்ற எண்ணம்தான் முதல்அமை ச்சருக்கு இருக்கிறது. இந்தியாவில் எந்த ஒரு மாநில மெட்ரோ ரெயில் திட்டத்தி ற்கும் வழங்காத நிதியை சென்னை மெட்ரோ 2 திட்டத்துக்கு மத்திய அரசு வழங்கியுள்ளது.

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் டி.ஜி.பி. நியமனத்தில் காலம் தாழ்த்தி வருகிறார். யு.பி.எஸ்.சி. பரிந்துரைத்த முதல் 3 இடங்களில் இருப்பவர்கள் நேர்மையானவர்களாக இருக்கிறார்கள். அவர்களும் ஓய்வு பெறும் தருவாயில் உள்ளார்கள்.

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தேர்வில் உள்ளவர்கள் 4 மற்றும் 5வது இடங்களில் இருக்கிறார்கள். அவர்களை நியமனம் செய்வதற்காக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் காலம் தாழ்த்தி வருகிறார். டிஜிபி இருந்தால்தானே சிஸ்டம் வேலை செய்யும். டிஜிபி மேலதான் பயம் இருக்கும். கடலூர் மாவட்டத்தில் 38 கிராமங்கள் டெல்டா பகுதியாக அறிவிக்கப்பட்டது வரவேற்கத்தக்கது. தேசிய ஜனநாயக கூட்டணி வலுவாக உள்ளது. எங்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் அதிக பலம் கொண்டுள்ளது. தி.மு.க.வுக்கு எதிராக மக்கள் வாக்களிக்க தயாராகிவிட்டார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# முட்டப்பதி வைகுண்டசாமி கோவிலில் திரண்ட அய்யாவழி பக்தர்கள்

கன்னியாகுமரி நவ.25

கன்னியாகுமரி அருகே உள்ள சின்னமுட்டத்தில் முட்டப்பதி அய்யா வைகுண்டசாமி பதி உள்ளது. இது அய்யா வைகுண்ட சாமியின் பஞ்சபதிகளில் ஒன்றாகும். அதுமட்டுமின்றி அய்யாவைகுண்டசாமி விஞ்சைபெற்ற இடமாகும். அப்படிப்பட்ட புகழ்பெற்ற இந்த வைகுண்டசாமி பதியில் ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று அய்யாவுக்கு சிறப்பு பணிவிடை நடைபெறுவது வழக்கம்.

அதேபோல கார்த்திகை மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையான இன்று அதிகாலை 4 மணிக்கு முட்டப்பதி அய்யாவைகுண்டசாமி பதியில் திருநடை திறக்கப்பட்டு அய்யாவுக்கு பணிவிடைகள் நடந்தன. அதைத் தொடர்ந்து உகப்படிப்பு நடந்தது. பின்னர் வாகன பணிவிடையும் மதியம் உச்சிப்படிப்பும் அதைத்தொடர்ந்து நித்திய பால் தர்மமும் அன்னதானமும் நடந்தது.

இதில் கலந்துகொண்ட அய்யா வழி பக்தர்களுக்கு இனிப்பு, தேங்காய், பழம், திருநாமம், வெற்றிலை, பாக்குமற்றும் பழங்கள் உள்ளிட்டவை இனிமமாக வழங்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து முட்டப்பதி அய்யா வைகுண்ட சாமி பதியின் தர்மகர்த்தா அய்யா வைகுண்டசாமியின் அற்புதங்கள் குறித்து பக்தர்களிடையே ஆன்மீக சொற்பொழிவாற்றினார். மாலையில் அய்யாவுக்கு பணிவிடை, வாகன பவனி அன்னதர்மம் போன்றவை நடைபெறுகிறது.

கார்த்திகை மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையான இன்று முட்டப்பதி அய்யா வைகுண்டசாமி பதியில் அய்யாவழி பக்தர்கள் கூட்டம் அதிகம் காணப்பட்டது. அதிகாலை முதலே கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான அய்யாவழி பக்தர்கள் முட்டப்பதியல் குவியத் தொடங்கினர். அவர்கள் முட்டப்பதி தீர்த்தக்கடலில் புனித நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து அய்யா வைகுண்டசாமியை வணங்கி வழிபட்டு சென்றனர்.

இதே போல சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமை பதி, முட்டப்பதியில் உள்ள அய்யா மூத்தநயினார் பதி, கன்னியாகுமரி அருகே நரியன்விளையில் உள்ள தெட்சணத்து துவாரகாவதி, ஆமணக்கின் விளை வாவைப்பதி, ரஸ்தாகாடு காயாம்பூபதி உள்பட அனைத்து அய்யா வைகுண்டசாமி பதிகளிலும் கார்த்திகை மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையான இன்று அய்யாவுக்கு பணிவிடைகள் நடந்தன.

# தஞ்சாவூர் : தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து 5 பேர் படுகாயம்



தஞ்சாவூர் நவ.25

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே நெடார் என்ற பகுதியில் இன்று மாலை தனியார் பஸ் சென்றுகொண்டிருந்தன. அந்த பஸ்சில் 20க்கும் மேற்பட்டோர் பயணித்தனர்.

இந்நிலையில், நெடார் மெயின் ரோட்டில் வளைவில் திரும்பியபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் சாலையில் எதிரே வந்த மற்றொரு தனியார் பஸ் மீது மோதியது. இந்த கோர விபத்தில் இரு பஸ்களும் சாலையோர பள்ளத்தில் சரிந்தன.

இந்த விபத்தில் இரு பஸ்களிலும் பயணித்த 5 பேர் படுகாயமடைந்தனர். விபத்து குறித்து தகவலறிந்த போலீசார், விரைந்து சென்று படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். இந்த விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கொலை முயற்சி வழக்கில் 3 பேர் குண்டர் சட்டத்தில் கைது



தூத்துக்குடி, நவ.25

தூத்துக்குடி சுந்தரவேல்புரம் பகுதியைச் சேர்ந்த வெற்றிசெல்வன் மகன் திரவியராஜ்(எ) ராஜுபாய் (வயது 26) மற்றும் சுப்பையா மகன் அருண்குமார்(23) ஆகிய 2 பேரும் தூத்துக்குடி வடபாகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 26.10.2025 அன்று நடந்த கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் ஆவர்.

அதேபோன்று தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் பகுதியைச் சேர்ந்த அப்துல்ரசாக்(எ) அபுபக்கர் மகன் சதாம்உசேன்(எ) சிலிண்டர்(35) என்பவர் கடந்த 26.10.2025 அன்று ஆறுமுகநேரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நடந்த கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளி ஆவார்.

மேற்சொன்ன 3 பேரையும் தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவின்பேரில் இன்று (23.11.2025) சம்பந்தப்பட்ட காவல் நிலைய போலீசார் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரை 131 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட காவல் துறை தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமைய வேண்டும்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு




திருப்பூர், நவ.25

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் நவம்பர் புரட்சி தின பொதுக்கூட்டம் திருப்பூர் ராயபுரத்தில் நேற்று நடைபெற்றது. இதில், கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி கலந்து கொண்டு பேசியதாவது:

கோவை, மதுரைக்கு வர வேண்டிய மெட்ரோ ரெயில்கள் திட்டத்தை மத்திய அரசு நிறுத்தியுள்ளது. இதற்கு எதிராக தமிழக முதல்அமைச்சர், பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். பா.ஜனதாவை ஆதரிக்காத மாநிலங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவது மட்டுமல்லாது, கவர்னர்கள்மூலமாக அந்த மாநில அரசுகளை உதாசினப்படுத்துகிறது. நாடு முழுவதும் தற்போது உள்ள அரசியல் சூழலில் தமிழ்நாடு மாடல் முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. பாசிச கூட்டணியை எதிர்கொள்ள மதசார்பற்ற ஜனநாயக சக்திகளை ஒன்றிணைக்க வேண்டியுள்ளது. தமிழ்நாட்டில் அதற்கு உதாரணமாக தி.மு.க. கூட்டணி செயல்படுகிறது.

மீண்டும் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி அமைய வேண்டும். அதுவே நமது நோக்கம், இலக்கு. தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியை மேலும் பலம்பொருந்தியதாக மாற்றி, வரும் சட்டமன்ற தேர்தலில் மதவாத, பிளவுவாத கட்சிகளை காலூன்ற விடாமல் செய்ய வேண்டும். இதேபோல் கேரளா, ஒடிசா, புதுச்சேரி மாநில தேர்தல்களிலும் பா.ஜனதா கூட்டணியை தோற்கடிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# புதிய தொழிலாளர் சட்டங்கள்: வரலாற்றுச் சிறப்புமிக்க மிகப்பெரும் சீர்திருத்தம் நயினார் நாகேந்திரன்



சென்னை, நவ.25

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

75 ஆண்டுகால பழைய 29 தொழிலாளர் சட்டங்களை ஒருங்கிணைத்து, தற்போதைய உலகளாவிய நடைமுறைக்கு ஏற்ப நான்கு புதிய தொழிலாளர் சட்டங்களை நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது, தொழிலாளர் நலனில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.

புதிய தொழிலாளர் நலச் சட்டங்களின் முக்கிய கூறுகள்:

1. அனைத்து ஊழியர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம்

2. வேலைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நியமனக் கடிதம் வழங்குவது கட்டாயம்.

3. சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கிக் தொழிலாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் உட்பட அனைவருக்கும் PF, ESIC, காப்பீடு.

4. 40 வயதிற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் இலவச உடல்நலப் பரிசோதனை. 5. கூடுதல் நேர வேலைக்கு 2 மடங்கு ஊதியம்.

6. பணிக்கொடை பெறுவதற்கான தகுதிக்காலம் 5 ஆண்டிலிருந்து ஓராண்டாக குறைக்கப்பட்டுள்ளது.

7. தகுந்த பாதுகாப்புடன்பெண்கள்அனைத்துத் துறைகளிலும் இரவு நேரத்தில் பணிபுரிய அனுமதி.

8. 26 வாரகால ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு.

இப்படி பல முக்கிய சட்டக்கூறுகளைக் கொண்டுள்ள புதிய தொழிலாளர் சட்டங்கள், தொழிலாளர்களின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மிகப்பெரும் சீர்திருத்தம் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

உழைக்கும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களின் நலனை மேம்படுத்துவதோடு, இந்திய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில், தற்சார்பு பாரதக் கனவு நிறைவேறும் நாள் வெகுதூரமில்லை! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குள் மழை நீர் புகுந்ததால் நோயாளிகள் அவதி



தூத்துக்குடி, நவ.25

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. இதனால் பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழையால் தாழ்வான இடங்களில் மழை நீர் குளம் போல் தேங்கி கிடக்கிறது. இந்த கன மழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது

இந்த நிலையில், தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று பிற்பகல் முதல் இன்று காலை வரை தொடர்ந்து பலத்த மழை பெய்து வரும் நிலையில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்மழை நீர்புகுந்துள்ளது. குழந்தைகள் வார்டு பகுதி, குழந்தைகள் வார்டு தீவிர சிகிச்சை பகுதி, இரத்த வங்கி மற்றும் பல்வேறு வார்டு பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளது.

இதனால் நோயாளிகள் கடும் அவதி அடைந்துள்ளனர்.

மேலும் மருத்துவமனைக்குள் பொதுமக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து ராட்சத பம்புகள் மூலம் தண்ணீரை வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

# இதுவரை 33,418 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது சென்னை மாநகராட்சி தகவல்



சென்னை, நவ.25

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

பெருநகர சென்னை மாநகராட்சியில் செல்லப் பிராணிகள் வளர்ப்பினை முறைப்படுத்த கடந்த 2023 ஆகஸ்ட் மாதம் முதல் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வாயிலாக செல்லப்பிராணி உரிமம் பெறும் முறை நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில் செல்லப் பிராணிக்களுக்கான உரிமம் பெறும் நடைமுறையை மேலும் விரைவுபடுத்தவும், இதன் மூலம் செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் எளிதாக தங்கள் செல்லப் பிராணிகளுக்கான உரிமத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை (ஆன்லைன் போர்டல்) மேயரால் 03.10.2025 அன்று தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வாயிலாக செல்லப் பிராணிகளுக்கு உரிமம் பதிவு செய்யும் உரிமையாளர்களுக்கு செல்லப் பிராணிகளுக்கான உரிமை பதிவு செய்தல், வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி நாய்களுக்கு செலுத்துதல் மற்றும் மைக்ரோப்சிப் பிங்பொருத்துதல்போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

இன்றுடன் 23.11.2025 செல்லப்பிராணிகளுக்கு உரிமம் பெறுவதற்கு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் செல்லப்பிராணிகள் உரிமையாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் செல்லப் பிராணிகளுக்கான உரிமம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட 23.11.2025 என்ற காலக்கெடுவானது, 07.12.2025 வரை மேலும் 14 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

அவ்வாறாக, இன்று (23.11.2025) திரு.வி.க. நகர், புளியந்தோப்பு, லாயிட்ஸ் காலனி, நுங்கம்பாக்கம், கண்ணம்மாப்பேட்டை, மீனம்பாக்கம் ஆகிய செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்களிலும், சோழிங்கநல்லூர் நாய் இனக்கட்டுப்பாட்டுமையத்திலும், என மொத்தம் 7 மையங்களில் 3,091 செல்லப் பிராணிகளுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்தி, மைக்ரோசிப் பொருத்தி செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது. இதுநாள்வரை 77,707 செல்லப்பிராணிகள்விவரங்கள்பதிவு செய்யப்பட்டு, 33,418 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கொலை வழக்கு; பவாரியா கொள்ளையர்களுக்கு தண்டனை அறிவிப்பு



சென்னை, நவ.25

கடந்த 1995 முதல் 2005 வரை வடமாநிலங்களைச் சேர்ந்த 'பவாரியா' கொள்ளையர்கள், தமிழகத்தில் பல கொலை, கொள்ளை சம்பவங்களை அரங்கேற்றி பீதியை ஏற்படுத்தினர். அதில் முக்கியமாக கடந்த 2005ம் ஆண்டு திருவள்ளூர் மாவட்ட கும்மிடிப்பூண்டி தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ சுதர்சனத்தின் வீட்டிற்குள் புகுந்த பவாரியா கொள்ளையர்கள், அவரை சுட்டுக்கொன்றுவிட்டு வீட்டில் இருந்த நகைகளை கொள்ளையடித்துச் சென்றனர்.

தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்த வழக்கில் கொள்ளையர்களை சுட்டுப்பிடிக்க அப்போதைய முதல்அமைச்சர் ஜெயலலிதா அதிரடியாக உத்தரவிட்டார். இதையடுத்து ஐ.ஜி. ஜாங்கிட் தலைமையில் தனிப்படை அமைத்து தீவிர விசாரணை நடத்திய போலீசார், அடுத்த ஒரு மாதத்திற்குள் ராஜஸ்தான், அரியானாவை சேர்ந்த 9 பவாரியா கொள்ளையர்களை கைது செய்து தமிழகத்திற்கு கொண்டு வந்தனர். கைதான 9 பேரில் 3 பேர் ஜாமீனில் வெளியாகி தலைமறைவான நிலையில், 2 பேர்சிறையிலேயே உயிரிழந்தனர்.

தற்போது சிறையில் உள்ள ஜெகதீஷ், ராகேஷ், அசோக் மற்றும் ஜாமீன் பெற்ற ஜெயில்தார் சிங் ஆகிய 4 பேர் வழக்கை சந்தித்து வருகின்றனர். இவர்கள் மீதான வழக்கில் சுமார் 20 ஆண்டுகளுக்கு பிறகு சென்னை கூடுதல் நீதிமன்ற அமர்வு கடந்த 21ந்தேதி தீர்ப்பு வழங்கியுள்ளது. அதன்படி, பவாரியா கும்பலைச் சேர்ந்த ஜெகதீஷ், ராகேஷ் மற்றும் அசோக் ஆகிய மூவரும் குற்றவாளிகள் என கோர்ட்டு தீர்ப்பளித்தது. அதனை தொடர்ந்து, குற்றவாளிகளின் தண்டனை விவரங்களை 24ந்தேதி (இன்று) கோர்ட்டு அறிவிக்க உள்ளது.

# ரெயிலில் இளம்பெண் தவறவிட்ட 17½ பவுன் நகைகள் மீட்பு

தென்காசி, நவ.25

சென்னை அருகம்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் சுந்தரமூர்த்தி. இவரது மகள் வளர்மதி (வயது 23). இவர்தனது குடும்பத்தினர் சிலருடன் சென்னையில் இருந்து விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே திருத்தங்கலில் உள்ள உறவினர் வீட்டுக்கு செங்கோட்டை செல்லும் பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயிலில் புறப்பட்டார். அவர்கள் திருத்தங்கல் ரெயில் நிலையத்தில் இறங்கினார்கள். அப்போது, வளர்மதி தான் வைத்திருந்த பெரிய பெட்டியை ரெயிலில் தவறவிட்டது தெரியவந்தது.

சிறிது நேரத்தில் ரெயில் அங்கிருந்து புறப்பட்டு சென்றது. இதனால் அதிர்ச்சி அடைந்த வளர்மதி அங்குள்ள ரெயில்வே போலீசில் தகவல் தெரிவித்தார். மேலும் அந்த பெட்டியில் தங்க சங்கிலி, நெக்லஸ், வளையல், டாலர் என சுமார் 17½ பவுன் நகை இருந்ததாக கூறினார். இதுகுறித்து உடனடியாக தென்காசி ரெயில்வே போலீசுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. ரெயில் தென்காசிக்கு வந்த போது, வளர்மதி பயணித்த பெட்டியில் ஏறி போலீசார் சோதனை செய்தனர். அதில் அவர் தவறிவிட்ட பெட்டி அப்படியே இருந்தது. அதை திறந்து சோதனை செய்த போது சுமார் ரூ.15 லட்சம் மதிப்பிலான நகைகள் இருந்தது. அவற்றை போலீசார் மீட்டனர். பின்னர் வளர்மதி மற்றும் குடும்பத்தினர் தென்காசிக்கு அழைத்து வரப்பட்டு, நகைகளுடன் பெட்டியை போலீசார் ஒப்படைத்தனர். ரெயில்வே போலீசாருக்கு வளர்மதி மற்றும் அவரது குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.

# மிக கனமழை எச்சரிக்கை: நெல்லைக்கு விரைந்த மாநில பேரிடர் மீட்பு குழு




நெல்லை, நவ.25

நெல்லை, தென்காசி மாவட்டங்களுக்கு இன்று (திங்கட்கிழமை) மிக கன மழைக்கான 'ஆரஞ்சு அலர்ட்' விடுக்கப்பட்டுள்ளது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 26 வீரர்கள் அடங்கிய மாநில பேரிடர் மீட்பு படை குழுவினர் நெல்லைக்கு விரைந்துள்ளனர். அவர்கள் அண்ணா விளையாட்டு மைதானத்தில் முகாமிட்டு உள்ளனர்.

பேரிடர் நேரத்தில் மக்களை காப்பாற்றுவதற்கான அனைத்து விதமாக உபகரணங்களையும் தயார் நிலையில் வைத்து உள்ளனர். அதேபோல் 28 பேர் கொண்ட தேசிய பேரிடர் மீட்பு குழுவும் தயார் நிலையில் உள்ளது. தாமிரபரணி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்ததால் நெல்லை கருப்பந்துறை, மேலநத்தம் பகுதியில் உள்ள தரைப்பாலங்கள், சீவலப்பேரி ஆற்றுப்பாலம், குப்பக்குறிச்சி சிப்காட் பாலம் உள்ளிட்ட பகுதிகளில் போலீசார், வருவாய்த்துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

நீர்வரத்து அதிகரிக்கும் போது பாலத்தில் வாகன போக்குவரத்தை தடை செய்ய ஏதுவாக போலீசார் 24 மணி நேரமும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். போக்குவரத்தை ஒழுங்குபடுத்த தடுப்புகள், கயிறுகள் போன்றவற்றுடன் தயாராக உள்ளனர்.

இதுகுறித்து நெல்லை மாவட்ட கலெக்டர் சுகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நிரம்பிய நிலையில் உள்ள நீர்நிலைகளின் அருகே செல்வதை மக்கள் தவிர்க்க வேண்டும். ஆற்றில் வெள்ளம் ஏற்படும் போது அதன் அருகே சென்று செல்பி எடுக்கவோ, குளிக்கவோ வேண்டாம். மின்சாரம் தடைபட வாய்ப்பு உள்ளதால் மெழுகுவர்த்தி, டார்ச்லைட் ஆகியவற்றை மக்கள் தயார் நிலையில் வைத்து கொள்வது அவசியம்.

மழை பெய்யும்போது பழைய மற்றும் சிதிலமடைந்தகட்டிடங்களிலோ, மரத்தின் அருகிலோ தஞ்சமடைய வேண்டாம். துண்டித்து விழுந்த மின்கம்பிகள், பழுதுபட்ட பாலங்கள், கட்டிடங்கள், மரங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பேரிடர் கால கட்டுப்பாட்டு மையம் 24 மணி நேரம் செயல்படும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளது. இதனை மக்கள் 1077 மற்றும் 0461 2501070 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் வணக்கம் நெல்லை 9786566111 என்ற வாட்ஸ் ஆப் எண்ணிலும் தகவல் தெரிவிக்கலாம். 'டி.என். அலார்ட்' செயலியை செல்போனில் பதிவிறக்கம் செய்து வைப்பதன் மூலம் வானிலை முன்னெச்சரிக்கை அறிவிப்புகளை தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சப்பாத்தி சாப்பிட்ட பள்ளி மாணவி மூச்சுத்திணறி உயிரிழப்பு

விழுப்புரம் நவ.25

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருகே உள்ள கரடிக்குப்பம் கிராமத்தை சேர்ந்தவர் தவமணி மகள் பூவரசி (14 வயது). இவர் 8ம் வகுப்பு படித்து வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பூவரசி வீட்டில் சப்பாத்தி மற்றும் உருளைக்கிழங்கு குருமா சாப்பிட்டு விட்டு தூங்கியதாக கூறப்படுகிறது. அப்போது இரவு 11 மணியளவில் மாணவிக்கு நெஞ்செரிச்சல் ஏற்பட்டதை அடுத்து படுக்கையில் இருந்து எழுந்து சென்று தண்ணீர் குடித்து விட்டு மீண்டும் தூங்கினார்.

பின்னர் நேற்று அதிகாலை 4 மணியளவில் பூவரசிக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டது. உடனடியாக மாணவியை பெற்றோர் சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் வழியிலேயே மாணவி பரிதாபமாக உயிரிழந்தார். சப்பாத்தி சாப்பிட்டதால் மாணவி மூச்சுத்திணறி இறந்ததாக கூறப்படுகிறது. இது குறித்து அவலூர்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கோவை: வனப்பகுதியில் இறந்து கிடந்த காட்டு யானை



கோவை, நவ.25

கோவை அருகே உள்ள தடாகம் வனப்பகுதியில் ஏராளமான காட்டு யானைகள் உள்ளன. இதுதவிர காட்டு பன்றிகள், காட்டெருமை, மான், சிறுத்தை உள்ளிட்ட ஏராளமான வனவிலங்குகளும் உள்ளன. இது இடம்பெயர்ந்து செல்லும் காட்டு யானைகளின் சந்திப்பு பகுதி என்பதால் இங்கு காட்டு யானைகளின் நடமாட்டம் எப்போதுமே அதிகமாக இருக்கும்.

இந்த நிலையில் தடாகம் அருகே உள்ள நஞ்சுண்டாபுரம் மலையடிவார பகுதியில் வனத்துறையினர் ரோந்து சென்றனர். அவர்கள் அங்குள்ள நாத்துக்காடு அருகே சென்ற போது அங்கு ஒரு ஆண் யானை உயிரிழந்து கிடந்தது. உடனே இதுகுறித்து வனத்துறை உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து வனச்சரக அதிகாரி திருமுருகன் தலைமையில் வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று ஆய்வு செய்தனர். அதற்குள் இருள் சூழ தொடங்கிவிட்டதாலும், அந்தப்பகுதியில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருப்பதாலும் பிரேத பரிசோதனை நடத்த முடியவில்லை.

இது குறித்து வனத்துறை அதிகாரிகள் கூறும்போது, உயிரிழந்தது 30 வயது மதிக்கத்தக்க ஆண் காட்டு யானை ஆகும். உடல் நிலை சரியில்லாத காரணத்தால் உயிரிழந்து இருக்க வாய்ப்பு இருக்கிறது. இருந்தபோதிலும் பிரேத பரிசோதனையின் முடிவில்தான் முழு விவரமும் தெரியவரும் என்றனர்.

# பேராசிரியர் தம்பதி வீட்டில் 22 பவுன் நகைகள் கொள்ளை

மயிலாடுதுறை, நவ.25

மயிலாடுதுறை டவுன் ஸ்டேஷன் ரோடு சாரதா நகரை சேர்ந்தவர் மணிகண்டன் (வயது 49). இவருடைய மனைவி விஜயா. கணவன்மனைவி இருவரும் கல்லூரி பேராசிரியர்கள் ஆவர். சம்பவத்தன்று கணவன்மனைவி இருவரும் வீட்டை பூட்டி விட்டு திருச்சிக்கு சென்றனர். இந்த நிலையில் மணிகண்டனின் வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்த அவரது தந்தை போலீசுக்கு தகவல் தெரிவித்தார்.

இதையடுத்து திருச்சியில் இருந்து மணிகண்டன் மயிலாடுதுறையில் உள்ள தனது வீட்டுக்கு வந்து பார்த்தார். அப்போது வீட்டில் 150 கிலோ எடை கொண்ட இரும்பு லாக்கரை கொள்ளையர்கள் தூக்கி சென்றதும் அந்த லாக்கரில் ரூ.20 லட்சம் மதிப்பிலான 22 பவுன் நகைகள் மற்றும் 1 கிலோ வெள்ளி பொருட்கள் இருந்ததும் தெரிய வந்தது. மேலும், வீட்டுவாசலில் நிறுத்தியிருந்த ஸ்கூட்டரையும் விட்டு வைக்காத மர்ம ஆசாமிகள் அதையும் திருடிச்சென்று உள்ளனர். இது தொடர்பாக மயிலாடுதுறை போலீசார் விசாரணை நடத்தி மர்ம நபர்களை தேடி வருகிறார்கள்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

25.11.2025

# சமூகநீதி வழங்குவதில் பட்டியலின மக்களுக்கும் திமுக அரசு துரோகம்: அன்புமணி ராமதாஸ்

சென்னை, நவ.25

பாமகதலைவர்அன்புமணிராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இந்தியாவில் பட்டியலின மக்களில் சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின் தங்கிய நிலையில் உள்ள மக்கள் தொடர்ந்து அதே நிலையிலேயே இருக்கிறார்கள்; அவர்களின்நிலையை முன்னேற்றவும், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டின் பயன்களை அவர்கள் வென்றெடுக்கவும் பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க மத்திய, மாநில அரசுகள் சட்டம் இயற்ற வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள நீதியரசர் பி.ஆர். கவாய் கூறியிருக்கிறார். இது தொடர்பான சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை பெரும்பாலான மாநிலங்கள் செயல்படுத்தியுள்ள நிலையில், அத்தீர்ப்பை திமுக அரசு சற்றும் மதிக்காதது கண்டிக்கத்தக்கது.

தலைமை நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றதையொட்டி ஊடகங்களுக்கு நேர்காணல் அளித்திருக்கும் நீதியரசர் கவாய், சமூக, கல்வி, பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையை அடிப்படையாகக் கொண்டு பட்டியலின மக்களுக்கு சமூகநீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்ற தீர்ப்பை தாம் இடம் பெற்றிருந்த 7 நீதிபதிகளைக் கொண்ட சுப்ரீம் கோர்ட்டு அமர்வு கடந்த ஆண்டு அளித்ததாகவும் தெரிவித்திருக்கிறார். ஆனால், அந்தத் தீர்ப்பின் நோக்கங்களைதிமுகஅரசுநிறைவேற்றவில்லை.

பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று கடந்த ஆண்டு ஆகஸ்ட் ஒன்றாம் தேதி சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்திருந்த நிலையில், முதல் மாநிலமாக தெலுங்கானா, கடந்த மார்ச் மாதம் பட்டியலினத்தவருக்கான 15 சதவீத இட ஒதுக்கீட்டை முறையே 1 சதவீதம், 9 சதவீதம், 5 சதவீதம் என 3 பிரிவுகளாக பிரித்து சட்டம் இயற்றியது. அதேபோல், கர்நாடகத்தில் பட்டியலின சமூகத்தினருக்கு வழங்கப்பட்டு வரும் 17 சதவீதம் இட ஒதுக்கீட்டை பட்டியலினம் (வலது) 6 சதவீதம், பட்டியலினம் (இடது) 6 சதவீதம், பிற பட்டியலினத்தவருக்கு 5 சதவீதம் என 3 பிரிவுகளாக உள் இட ஒதுக்கீடு வழங்கி அம்மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

ஆந்திராவும் பட்டியலின மக்களுக்கான 15 சதவீதம் இட ஒதுக்கீட்டை முறையே 6.5 சதவீதம், 7.5 சதவீதம், 1 சதவீதம் என 3 பிரிவுகளாக பிரித்து உள் இட ஒதுக்கீடு வழங்கியிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சியின் வலியுறுத்தலைத் தொடர்ந்து 2009ம் ஆண்டில் அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்ட உள் இட ஒதுக்கீட்டுக்குப் பிறகு, வேறு எவருக்கும் இன்று வரை உள் இட ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.

தமிழ்நாட்டில் அருந்ததியர்களையும் சேர்த்து பட்டியலினத்தில் உள்ள 76 சமூகங்களுக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களில் பெரும்பாலான சமூகங்களுக்கு இன்னும் இட ஒதுக்கீட்டின் பயன்கள் கிடைக்கவில்லை. அதைக் கருத்தில் கொண்டுதான் பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்தது. ஆனால், அதன்பின் 16 மாதங்களாகியும் அந்தத் தீர்ப்பை திமுக அரசு செயல்படுத்த மறுக்கிறது.

சுப்ரீம்கோர்ட்டுதலைமைநீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற நீதியரசர் பி.ஆர். கவாய் இடம் பெற்றிருந்த அமர்வு தான் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று கடந்த 2022ம் ஆண்டு ஆணையிட்டது. அதன்பின் இன்று வரை 1,335 நாள்களாகியும் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. இதற்காக ஏராளமான நடவடிக்கைகளை எடுத்தும், போராட்டங்களை நடத்தியும் கூட எந்த பயனும் ஏற்படவில்லை.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை வன்னியர்களாக இருந்தாலும், பட்டியலினத்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு சமூகநீதி வழங்கக்கூடாது என்பது தான் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசின் கொள்கையாக உள்ளது. தமிழ்நாட்டின் இரு பெரும் சமூகங்களுக்கு அநீதி இழைக்கும் திமுக அரசுக்கு அந்த சமூகங்கள் வரும் தேர்தலில் மறக்க முடியாத பாடத்தை புகட்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சென்னை ஐதராபாத் புல்லெட் ரெயில் திட்டம்: 12 மணி நேர பயணம் 2.20 மணி நேரமாக குறையும்




சென்னை, நவ.25

உலக அளவில் வளர்ந்த நாடுகளில் அதிவேக புல்லெட் ரெயில் சேவை இருக்கிறது. அந்த வகையில், ஜப்பான், சீனா, தென் கொரியா, இத்தாலி மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளில் புல்லெட் ரெயில் சேவை உள்ளது.

வளர்ந்து வரும் நாடான இந்தியாவிலும் புல்லெட் ரெயில் திட்டம் மராட்டிய மாநிலம் மும்பை குஜராத் மாநிலம் அகமதாபாத் இடையே செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும் 2027ம் ஆண்டு சூரத் வாபி இடையேயும், 2029ம் ஆண்டு முழுவதுமாகவும் இந்த வழித்தடத்தில் புல்லெட் ரெயில் சேவை தொடங்க இருக்கிறது.

இதேபோல், தென்மாநிலங்களில் 2 வழித்தடத்தில் புல்லெட் ரெயில் சேவை தொடங்குவது குறித்து சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகிறது. சென்னை பெங்களூரு மைசூரு வழித்தடத்தில் புல்லெட் ரெயில் திட்டம் செயல்படுத்துவது குறித்து நிலம் அளவீட்டு பணி நடந்து வருகிறது.

மேலும், சென்னை ஐதராபாத் இடையே 778 கிலோ மீட்டர்தூரத்திற்கு புல்லெட் ரெயில் திட்டத்தை தொடங்கவும் தென் மத்திய ரெயில்வே திட்ட அறிக்கையை தயாரித்து வந்தது. சென்னையில் இருந்து கூடூர் வழியாக முதலில் ஐதராத்துக்கு புல்லெட் ரெயில் சேவையை தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், தமிழக அரசு திருப்பதி வழியாக புல்லெட் ரெயில் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று தென் மத்திய ரெயில்வேயிடம் ஏற்கனவே கோரிக்கை வைத்தது. அதன்படி, வழித்தடத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, இறுதி வழித்தட விவரங்களை விரிவான அறிக்கையாக தயாரித்து தமிழக அரசிடம் தென் மத்திய ரெயில்வே வழங்கியுள்ளது. கொள்கை ரீதியில் ஒப்புதல் பெறப்பட்டால், சென்னை ஹைதராபாத் புல்லெட் ரெயில் திட்டம் உறுதி செய்யப்பட்டுவிடும். நிலம் கையகப்படுத்தும் பணியும் தொடங்கிவிடும்.

தற்போதைய நிலையில், தமிழக அரசின் கன்சல்டன்சி நிறுவனமான ரிட்ஸ், தமிழகத்தில் புல்லெட் ரெயில் திட்டத்திற்கு 223.44 ஹெக்டேர் நிலம் தேவைப்படும் என்று அறிக்கை அளித்துள்ளது. மேலும், 65 சாலைகளையும், 21 உயர் மின்னழுத்த வழித்தடத்தையும் கடந்து செல்ல வேண்டியது இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், சென்னை சென்டிரல், மீஞ்சூர் அருகே உள்ள சென்னை வெளிவட்ட சாலை பகுதியிலும் 2 புல்லெட் ரெயில் நிலையங்கள் அமைக்கப்படும் என கூறப்படுகிறது. இதற்காக அப்பகுதியில் தலா 50 ஏக்கர் நிலம் தேவைப்படும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. சென்னை ஹைதராபாத் புல்லெட் ரெயில் திட்டம் செயல்பாட்டுக்கு வந்தால், தற்போதைய 12 மணி நேர பயணம் 2.20 மணி நேரமாக குறைந்துவிடும்.

# இன்றைய ராசி பலன்கள் (25.11.2025)

**மேஷம்** புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.

**ரிஷபம்** உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.

**மிதுனம்** சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.

**கடகம்** வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.

**சிம்மம்** தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

**கன்னி** நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.

**துலாம்** புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.

**விருச்சிகம்** உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமைதேவை.

**தனுசு** வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.

**மகரம்** அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

**கும்பம்** புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.

**மீனம்** மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# தென்காசி அருகே 2 பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து 6 பேர் உயிரிழப்பு



தென்காசி நவ.25

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே இரண்டு தனியார் பேருந்துகள் இன்று நேருக்கு நேர் மோதி பயங்கர விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் 5 பெண்கள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். மேலும் சிறுவர்கள் உட்பட 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

விபத்து குறித்து தகவலறிந்து வந்த போலீசார் மற்றும் மீட்பு படையினர் காயமடைந்தவர்களை மீட்டனர். அவர்கள் 20க்கும் மேற்பட்ட ஆம்புலன்சுகள் மூலம் தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் மேலும் சிலரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் பேருந்துகள் போட்டி போட்டு கொண்டு சென்றதால் விபத்து ஏற்பட்டதாக முதல்கட்ட தகவல் வெளியாகி உள்ளது. விபத்து நடந்த பகுதியில் மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் மருத்துவமனையில் அனுமதி

அ.தி.மு.க., முன்னாள் அமைச்சரும், தற்போதைய எம்.எல்.ஏ.வுமான நத்தம் விஸ்வநாதன், உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

உயர் ரத்த அழுத்தம் காரணமாக அவருக்கு உடல்நல பாதிப்பு ஏற்பட்டதாக முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வரும் நிலையில், சிகிச்சை முடிந்து ஓரிரு நாட்களில் அவர் வீடு திரும்புவார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# 'ஜிம் போகாமலேயே எடை குறைத்தேன்' பிரபல நடிகை



பல கதாநாயகிகள் திரைப்படங்களில் தங்கள் கதாபாத்திரங்களுக்கு ஏற்ப எடை அதிகரித்து குறைக்கிறார்கள். சில கதாநாயகிகள் தொடர்ந்து ஜிம்மில் கடுமையான பயிற்சிகள் செய்து பிட்டாக மாறுகிறார்கள். ஆனால் இந்த கதாநாயகி ஜிம்மிற்கு செல்லாமலேயே எடையைக் குறைத்து அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கினார்.

அவர் யார் தெரியுமா?. வேறு யாருமில்லை வித்யா பாலன்தான். சமீபத்தில், இவர் ஜிம்மிற்கு செல்லாமலேயே எடை குறைத்ததாக கூறினார். தனது தொழில் வாழ்க்கையின் தொடக்கத்தில் குண்டாக இருந்ததாகவும், இதனால் பல விமர்சனங்களை எதிர்கொண்டதாகவும் கூறினார்.

மேலும், எவ்வளவு உடற்பயிற்சி செய்கிறேனோ, அவ்வளவு எடை கூடியதாகவும், இதனால், பிரச்சினையை கண்டறிய ஒரு மருத்துவ குழுவை அணுகியதாகவும் தெரிவித்தார். அவர்கள் தன்னிடம் இது கொழுப்பல்ல, வீக்கம் என்று சொன்னதாகவும், பின்னர், அவர்கள் கொடுத்த வீக்கத்தைக் குறைக்கும் உணவுமுறையை பயன்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

# விஜய் சேதுபதி சம்யுக்தா மேனன் படத்தின் படப்பிடிப்பு நிறைவு ; விரைவில் முக்கிய அறிவிப்பு



இயக்குனர் பூரி ஜெகநாத், விஜய் சேதுபதியுடன் ஒரு படத்திற்காக கைகோர்த்துள்ளார். சம்யுக்தா மேனன் இதில் கதாநாயகியாக நடிக்கிறார். தற்போது இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது. இதனை தயாரிப்பாளர் சார்மி கவுர் தெரிவித்திருக்கிறார். தொடர்ந்து முக்கிய அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படத்தின் டைட்டில் செப்டம்பர் 23 அன்று வெளியிட திட்டமிடப்பட்டிருந்தது, ஆனால் அந்த நேரத்தில் தமிழ்நாட்டில் நடந்த ஒரு துயர சம்பவம் காரணமாக அது தள்ளிப்போனது.

இப்படத்தில் தபு, துனியா விஜய் மற்றும் பிரம்மாஜி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு ஹர்ஷவர்தன் ராமேஷ்வர் இசையமைத்துள்ளார்.

# 'மகாநதிக்குப் பிறகு எந்த பட வாய்ப்பும் கிடைக்கவில்லை' கீர்த்தி சுரேஷ்



நடிகை கீர்த்தி சுரேஷ் சந்துரு இயக்கத்தில் 'ரிவால்வர் ரீட்டா' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். பேஷன் ஸ்டுடியோஸ் மற்றும் தி ரூட் நிறுவனங்கள் இணைந்து இந்த படத்தை தயாரித்திருக்கிறது. இப்படம் வருகிற 28ம் தேதி தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் வெளியாகிறது.

தற்போது 'ரிவால்வர் ரீட்டா' படத்தின் புரோமோஷன் நிகழ்ச்சியில் கீர்த்தி சுரேஷ் பங்கேற்று வருகிறார். இதற்கிடையில், ஒரு நேர்காணலில் பேசிய அவர், மகாநதிக்குப் பிறகு எந்த பட வாய்ப்பும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார். அவர் பேசுகையில்,

"சொன்னா நம்ப மாட்டீங்க, மகாநதி ரிலீஸானப் பிறகு, 6 மாதங்களுக்கு எனக்கு எந்த பட வாய்ப்பும் கிடைக்கவில்லை. யாரும் என்னிடம் கதை சொல்லவும் வரவில்லை. இதனால் நான் சோர்வடையவில்லை.

எனக்கான ஒரு தனித்துவமான கதாபாத்திரத்தை உருவாக்க அவர்கள் நேரம் எடுத்துக்கொள்கிறார்கள் என்று அதை நேர்மறையாக எடுத்துக் கொண்டேன். அந்த நேரத்தை என்னை தயார்படுத்திக்கொள்ள பயன்படுத்திக்கொண்டேன்" என்றார்.

# 'அது என் கெரியரில் சிறந்த படம்' ராம் பொதினேனி



ராம் பொதினேனியின் 'ஆந்திரா கிங் தாலுகா', தற்போது தெலுங்கில் மிகவும் எதிர்பார்க்கப்படும் படங்களில் ஒன்றாகும். இந்தப் படம் வருகிற 27ம் தேதி வெளியாக உள்ளது..

இந்நிலையில், ஆந்திரா கிங் தாலுகாவின் இசை நிகழ்ச்சி சமீபத்தில் விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பேசிய ராம் பொதினேனி, ஆந்திரா கிங் தாலுகாவை "தனது கெரியரில் பெருமைமிக்க படம்" என்று கூறினார்.

இதில் உபேந்திரா மற்றும் இளம் நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் பாடல்கள், போஸ்டர்கள், டீசர் மற்றும் டிரெய்லர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றன.

# பாபர், பர்ஹான் அதிரடி.. ஜிம்பாப்வே அணிக்கு கடின இலக்கு நிர்ணயித்த பாகிஸ்தான்



பாகிஸ்தான், இலங்கை மற்றும் ஜிம்பாப்வே கிரிக்கெட் அணிகள் இடையிலான முத்தரப்பு டி20 தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெற்று வரும் 4வது லீக் ஆட்டத்தில் ஜிம்பாப்வே பாகிஸ்தான் அணிகள் விளையாடி வருகின்றன.

இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக சாஹிப்சாதா பர்ஹான் சைம் அயூப் களமிறங்கினர். இவர்களில் சைம் அயூப் 13 ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். இதனையடுத்து பர்ஹான் உடன் பாபர் அசாம் கை கோர்த்தார். இருவரும் அதிரடியாக அடி பாகிஸ்தான் அணிக்கு வலு சேர்த்தனர். ஜிம்பாப்வே பந்துவீச்சை சிறப்பாக எதிர்கொண்ட இந்த ஜோடியில் இருவரும் அரைசதம் கடந்து அசத்தினர். 103 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. பர்ஹான் 63 ரன்களில் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்திலேயே பாபர் அசாம் 74 ரன்களில் அவுட்டானார்.

பின்னர் களமிறங்கிய வீரர்களில் பஹீம் அஷ்ரப் 3 ரன்களிலும், முகமது நவாஸ் 4 ரன்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். இறுதி கட்டத்தில் பகர் ஜமான் (10 பந்துகளில் 27 ரன்கள்) அதிரடியாக ஆடி பாகிஸ்தான் அணி 190 ரன்களை கடக்க உதவினார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுகளை இழந்து 195 ரன்கள் அடித்துள்ளது. ஜிம்பாப்வே தரப்பில் சிக்கந்தர் ராசா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதனையடுத்து 196 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி ஜிம்பாப்வே பேட்டிங் செய்ய உள்ளது.

# ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன்: இந்திய வீரர் லக்ஷயா சென் சாம்பியன்



ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டி சிட்னியில் நடைபெற்றது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் உலக தரவரிசையில் 9வது இடத்தில் இருக்கும் இந்திய இளம் வீரர் லக்ஷயா சென், தரவரிசையில் 26வது இடம் வகிக்கும் ஜப்பான் வீரர் யுஷி தனகா உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய லக்ஷயா சென் 21 15 மற்றும் 2111 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார்.

# அவரது பந்துவீச்சு நம்ப முடியாத அளவுக்கு இருந்தது ஆஸி.கேப்டன் புகழாரம்



ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் பங்கேற்றுள்ளது. இதன் முதலாவது டெஸ்ட் போட்டி உலகின் அதிவேக ஆடுகளமான பெர்த்தில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி 32.5 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த நிலையில் முதல் இன்னிங்சில் 172 ரன்னில் ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக ஹாரி புரூக் 52 ரன்கள் அடித்தார். ஆஸ்திரேலிய தரப்பில் மிட்செல் ஸ்டார்க் 7 விக்கெட்டுகளை அள்ளினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி 132 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக அலெக்ஸ் கேரி 26 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக பென் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் 40 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி வெறும் 34.4 ஓவர்களில் 164 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் ஆஸ்திரேலிய அணிக்கு 205 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இங்கிலாந்து தரப்பில் கஸ் அட்கின்சன் 37 ரன்களும், ஆலி போப் 33 ரன்களும் அடித்தனர். ஆஸ்திரேலியா தரப்பில் ஸ்காட் போலண்ட் 4 விக்கெட்டுகளும், ஸ்டார்க் மற்றும் பிரெண்டன் டாகெட் தலா 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 205 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு தொடக்க ஆட்டக்காரர் ஆன டிராவிஸ் ஹெட் அதிரடியாக ஆடி வெற்றியை தேடி கொடுத்தார். 2வது இன்னிங்சில் வெறும் 28. 2 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்த ஆஸ்திரேலியா 205 ரன்கள் அடித்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இங்கிலாந்து பந்துவீச்சை வெளுத்து வாங்கிய டிராவிஸ் ஹெட் 123 ரன்கள் குவித்தார். இந்த போட்டியில் மொத்தம் 10 விக்கெட்டுகள் வீழ்த்திய ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

இந்நிலையில் இந்த வெற்றிக்கு பிறகு ஆஸ்திரேலிய கேப்டன் ஸ்டீவ் ஸ்மித் அளித்த பேட்டியில், "தொடரை வெற்றியோடு தொடங்கி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இது போன்று 2 நாளில் முடியும்போது அதில் சரியான இடத்தில் இருப்பதை விரும்புகிறோம். டிராவிஸ் ஹெட்டின் இன்னிங்சை உற்சாகமாக பார்த்து ரசித்தோம். அவரது சில ஷாட்டுகள் பிரமாதம். சில நேரம் பந்து சரியாக கிளிக் ஆகாத போதிலும் இடைவெளியில் ஓடியது. எல்லாமே அவருக்குரிய நாளாக அமைந்தது. மிட்செல் ஸ்டார்க்கின் பந்து வீச்சு நம்ப முடியாத அளவுக்கு சிறப்பாக இருந்தது. மூன்று முன்னணி பவுலர்களில் 2 பேர் காயத்தால் இல்லை. அதனால் பொறுப்பை எடுத்துக் கொண்ட அவர் மிகவும் நேர்த்தியாக பந்து வீசினார். ஸ்காட் போலன்டின் பந்து வீச்சும் அபாரமாக இருந்தது. அடுத்த டெஸ்டுக்கு கேப்டன் கம்மின்ஸ் திரும்புவார் என நம்புகிறேன்" என்று கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.